உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்! தமிழனாய!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com — மாற்றத்தின் ஆரம்பம் — dhinatamil

♦ பதிப்பு : நாகர்கோவில் ♦ 15.10.2026 ♦ மலர் 04 ♦இதழ்: 289 ♦ வியாழன்

♦Edition : Nagercoil ♦15.10.2026 ♦Vol : 04 ♦Issue : 289 ♦Page : 4 ♦Rs. 5/-

மத்திய அரசுக்கு ராகுல் எச்சரிக்கை

ஒடுக்க வேண்டாம்

புதுடெல்லி அமைதியான முறையில் போராட்டம் நடத்துவது மக்களின் ஜனநாயக உரிமை என்றும், அந்த உரிமையைப் பறிக்க யாரையும் அனுமதிக்க மாட்டோம் என்றும் காங்கிரஸ் மூத்த தலைவர் ராகுல் காந்தி தெரிவித்துள்ளார். டெல்லியில் மாணவர் அமைப்பு நடத்திய போராட்டத்தின்போது காவல்துறையினரால் தாக்கப்பட்டதாகக் கூறப்படும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களுக்கு ஆதரவாக அவர் இந்தக் கருத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக ராகுல் காந்தி தனது எக்ஸ் சமூக வலைதளப் பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில், ஜனநாயகத்தின் குரலை ஒடுக்க நினைப்பவர்கள் ஒருநாள் நீதியின் கடுமையான நடவடிக்கைகளை எதிர்கொள்ள வேண்டியிருக்கும் என்று குறிப்பிட்டுள்ளார். பிரதமர் நரேந்திர மோடி, மத்திய உள்துறை அமைச்சர் அமித் ஷா, தலைமைத் தேர்தல் ஆணையர் ஞானேஷ் குமார் உள்ளிட்டோர் மட்டுமின்றி, இந்த விவகாரத்தில் தொடர்புடைய சாதாரண தொண்டர்கள் அல்லது அதிகாரிகள் யாராக இருந்தாலும் சட்டப்படி நடவடிக்கையை எதிர்கொள்ள நேரிடும் என அவர் தெரிவித்துள்ளார்.

மேலும், போராட்டத்தின்போது காவல்துறையினரின் அத்துமீறல்களையும் சட்டவிரோதக் கைதுகளையும் எதிர்கொண்டமாணவர்கள்மற்றும் இளைஞர்கள், அதுதொடர்பான ஆதாரங்களைப் பாதுகாத்துவைத்திருக்கவேண்டும் என்று ராகுல் காந்தி கேட்டுக்கொண்டுள்ளார். குறிப்பாக, சம்பவங்களின்போது எடுக்கப்பட்ட காணொளிகள், புகைப்படங்கள் உள்ளிட்ட ஆதாரங்களைச்சேகரித்துவைத்திருப்பது எதிர்காலத்தில் சட்டநடவடிக்கைகளுக்கு உதவியாக இருக்கும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அமைதியான முறையில் போராடுவது ஒவ்வொரு குடிமகனுக்கும் உள்ள உரிமை என்றும், அந்த உரிமையைப் பறிக்கும் முயற்சிகளை அனுமதிக்க முடியாது என்றும் தனது பதிவில் ராகுல் காந்தி வலியுறுத்தியுள்ளார்.

முன்னதாக, ஞானேஷ் குமார் பதவி விலக வேண்டும் என்று வலியுறுத்தி, கடந்த அக்டோபர் 10ம் தேதி டெல்லியில் காங்கிரஸ் கட்சியின் மாணவர் அமைப்பான தேசிய மாணவர் சங்கம் சார்பில் போராட்டம் நடைபெற்றது. இந்தப் போராட்டத்தின்போது காவல்துறையினர் தாக்குதல் நடத்தியதாகப் புகார்கள் எழுந்தன. இதில் பாதிக்கப்பட்டதாகக் கூறப்படும் மாணவர்கள் மற்றும் இளைஞர்களைச் சந்தித்த ராகுல் காந்தி, அவர்களுடன் செய்தியாளர்களையும் சந்தித்துப் பேசினார்.

அப்போது பேசிய அவர், போராட்டத்தில் ஈடுபட்டவர்களுக்கு எதிராகச் செயல்பட்டவர்கள் யாராக இருந்தாலும் அவர்கள் பொறுப்பேற்க வேண்டும் என்று தெரிவித்தார். பிரதமர் மோடி, அமித் ஷா, ஞானேஷ் குமார் முதல் சாதாரண காவலர் வரை, தவறு செய்தவர்கள் அனைவரும் தண்டிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறியிருந்தார்.

மேலும், இந்தப் போராட்டம் தனிநபர்களுக்கான போராட்டம் அல்ல என்றும், இது இந்திய மக்களின் குரலை வெளிப்படுத்தும்போராட்டம் என்றும் ராகுல் காந்தி குறிப்பிட்டார். மக்களின் குரலை ஒடுக்க முடியாது என்றும், ஜனநாயகத்தில் கருத்துகளை வெளிப்படுத்துவதற்கும் அமைதியான முறையில் எதிர்ப்புத் தெரிவிப்பதற்கும் உரிய இடம்வழங்கப்படவேண்டும் என்றும் அவர் வலியுறுத்தினார்.

இதற்கிடையே, அக்டோபர் 10ம் தேதி நடைபெற்ற போராட்டத்தின்போது காவல்துறையினர் நடத்தியதாகக் கூறப்படும் தாக்குதல் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்த உத்தரவிட வேண்டும் என்று கோரி, காங்கிரஸ் மாணவர் அமைப்பு சார்பில் டெல்லி உயர் நீதிமன்றத்தில் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.



இந்த மனுவில், போராட்டத்தின்போது நடைபெற்ற சம்பவங்கள் குறித்து சுதந்திரமான விசாரணை நடத்தப்பட வேண்டும்என்றும், புகார்களுக்கு உரிய நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்என்றும் கோரப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. இந்த மனு அக்டோபர் 16ம் தேதி விசாரணைக்கு வர உள்ளது.

மாணவர் அமைப்பின் போராட்டம், காவல்துறையினரின் நடவடிக்கைகள் தொடர்பான புகார்கள் மற்றும் அதனைத் தொடர்ந்து நீதிமன்றத்தில் தாக்கல்செய்யப்பட்டுள்ள மனு ஆகியவை டெல்லி அரசியல் வட்டாரத்தில் கவனம் பெற்றுள்ளன. இந்த விவகாரத்தில் நீதிமன்ற விசாரணை நடைபெற உள்ள நிலையில், போராட்டத்தின்போது நடந்ததாகக் கூறப்படும் சம்பவங்கள் தொடர்பான ஆதாரங்களைப் பாதுகாக்க வேண்டும் என்ற ராகுல் காந்தியின் வேண்டுகோள் முக்கியத்துவம் பெற்றுள்ளது.

இலக்கிய பட்டறை சார்பில் 2 நூல்களின் ஆய்வரங்கம் மற்றும் நல்லாசிரியர் விருது பாராட்டு விழா



நாகர்கோவில், அக்.15

இலக்கியப் பட்டறையின் 174 வது கூடுகை அரசு கலை அறிவியல் கல்லூரி தமிழ்த்துறைத் தலைவர் முனைவர் சுகிர்தா பஸ்மத் தலைமையில் நாகர்கோவில் ஆயர் இல்ல வளாகத்தில் நடைபெற்றது. நிகழ்வில் பி. உஷாதேவி எழுதிய சேம்பராணு நாவலை மகளிர் கிறிஸ்தவக் கல்லூரி தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் தே. ஷீஜா ஆய்வு செய்து பேசினார். ஜவகர். ஜி எழுதிய கனவினைப் போலொரு காலம் சிறுகதை நூலை எழுத்தாளரும் விமர்சகருமான சிவசங்கர் ஆய்வு செய்து பேசினார். இலக்கியப் பட்டறை உறுப்பினர் க. நாகராஜகுமார் தமிழ் நாடு அரசின் நல்லாசிரியர் விருது பெற்றுள்ளமைக்கான பாராட்டு நிகழ்வு நடைபெற்றது. கவிஞர் ஆகிரா விருதாளரை அறிமுகம் செய்தார். ஊடகவியலாளர் சுவாமிநாதன் பாராட்டிப் பேசினார். நிறைவாக நூலாசிரியர்கள் மற்றும் விருதாளர் ஏற்புரை வழங்கினர்.

முன்னதாக விவேகானந்தா கல்லூரி தமிழ்த் துறை இணைப் பேராசிரியர் சு. ஜெயக்குமாரி அனைவரையும் வரவேற்றார். இலக்கியப் பட்டறை நிறுவனர் குமரி ஆதவன் நன்றி கூறினார். தனியார் பண்பலை அறிவிப்பாளர் விஜி பூர்ண சிங் நிகழ்ச்சியைத் தொகுத்து வழங்கினார். நிகழ்வில் எழுத்தாளர்கள் கலைவாணன், ஜெயக்குமார், ஹசன், ஆலீறோஸ், கடலம்மா ஜூடி, இந்து கல்லூரி தமிழ்த்துறை இணைப் பேராசிரியர் சொர்ணபமீலா உட்பட ஏராளமான எழுத்தாளர்கள், வாசகர்கள் பங்கேற்று சிறப்பித்தனர்.

நாகர்கோவிலில் ஆட்டோ டிரைவரை நள்ளிரவில் சவாரிக்கு அழைத்து சென்று தாக்குதல்; 4 மாணவர்கள் மீது வழக்கு

நாகர்கோவில், அக்.15

நாகர்கோவில் மேல புத்தேரி பகுதியை சேர்ந்தவர் முத்துக்குமார் (47) ஆட்டோ டிரைவர். கடந்த 12ஆம் தேதி இரவு சுமார் 11 30 மணிக்கு இவரது செல்போனுக்கு வந்த அழைப்பில் அவசரமாக மருத்துவமனை செல்ல வேண்டும் என்றும், இறச்சகுளம் வரை வர வேண்டும் என கூறியுள்ளனர். இதை அடுத்து முத்துக்குமார் இறச்சகுளத்துக்கு சென்றுள்ளார். ஆனால் சவாரிக்கு வரக்கூறிய இடத்தில் யாரும் இல்லை. அழைப்பு வந்த போனை தொடர்பு கொண்ட போது யாரும் போனை எடுக்கவில்லை. இதை அடுத்து மீண்டும் முத்துக்குமார் வீட்டுக்கு புறப்பட்டார். புத்தேரி மாரியம்மன் கோவில் அருகே வரும் போது பைக்கில் பின்தொடர்ந்து வந்த கும்பல் அவரை வழிமறித்தது. இதை அடுத்து சவாரிக்கு வந்தால் கொஞ்ச நேரம் காத்திருக்க மாட்டீர்களா? என கேட்டு முத்துக்குமாரை சரமாரியாக தாக்கினர். இதில் அவர் படுகாயம் அடைந்தார். பின்னர் முத்துக்குமாரின் செல்போனை உடைத்து விட்டு கும்பல் தப்பி சென்றது. இது குறித்து முத்துக்குமார் வடசேரி காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார் விசாரணை பத்தி ஆட்டோடிரைவரைதாக்கியதாக புத்தேரி துவாரா நகர் பகுதி சேர்ந்த 17 வயது இளம் சிறார், அவரது நண்பர்கள் இறச்சகுளத்தை சேர்ந்த 16 ,17 நிரம்பிய மூன்று இளம் சிறார்கள் உட்பட நான்கு பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர். இதில் ஒருவர் பாலி டெக்கனிக் மாணவர் ஆவார். மற்ற மூன்று பேர் பிளஸ் ஒன் மாணவர்கள் ஆவார்கள். மாணவர்கள் நள்ளிரவில் ஆட்டோ டிரைவரை சவாரிக்கு அழைத்து தாக்கிய சம்பவம் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவில் விழாவையொட்டி விவேகானந்தர் மண்டபத்திற்கு 20ஆம் தேதி பகல் 12 மணி முதல் படகு போக்குவரத்து ரத்து

கன்னியாகுமரி, அக்.15

சர்வதேச சுற்றுலா தலமான கன்னியாகுமரிக்கு உள்நாட்டு மற்றும் வெளி நாட்டு சுற்றுலா பயணிகள் ஆயிரக்கணக்கானோர் வந்து செல்கின்றனர். சுற்றுலா பணிகள் கன்னியாகுமரி கடல் நடுவில் அமைந்துள்ள பாறையில் சுவாமி விவேகானந்தர் நினைவு மண்டபமும் அதன் அருகில் உள்ள மற்றொரு பாறையில் 133 அடி உயர திருவள்ளுவர் சிலையும் அமைந்துள்ளது. இவற்றை இணைக்கும் கண்ணாடி இழை கூண்டு பாலம் வழியாக நடந்து சென்று கண்டுகளித்து வருகின்றனர். சுற்றுலா பயணிகள் வசதிக்காக தமிழக அரசின் பூம்புகார் கப்பல் போக்குவரத்துக் கழகம் சார்பில் பொதிகை, குகன், விவேகானந்தா ஆகிய 3 படகுகள் இயக்கப்பட்டு வருகின்றன. காலை 8 மணி முதல் மாலை 4 மணி வரை இடைவேளை இன்றி இந்த படகு போக்குவரத்து நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில் கன்னியாகுமரி பகவதி அம்மன் கோவிலில் நவராத்திரி விழா கடந்த 11 ம்தேதி முதல் தொடங்கி நடைபெற்று வருகிறது. 10ம் திருவிழாவான வரும் 20ம் தேதி நண்பகல் 12 மணிக்கு பகவதி அம்மன் வெள்ளிக் குதிரை வாகனத்தில் எழுந்தருளி மகாதானபுரம் நோக்கி பரிவேட்டைக்காக ஊர்வலமாக புறப்பட்டு செல்லும் நிகழ்ச்சி நடைபெறுகிறது. இதனையொட்டி இந்த பரிவேட்டை திருவிழாவில் சுற்றுலா பயணிகள், விவேகானந்த கேந்திரா மற்றும் விவேகானந்தர் மண்டபம் ஊழியர்களும், பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக ஊழியர்களும் கலந்து கொள்வதற்கு வசதியாக அன்று நண்பகல் 12 மணி முதல் விவேகானந்தர் மண்டபத்துக்கு படகு போக்கு வரத்து ரத்து செய்யப்படுகிறது என்று கன்னியாகுமரி பூம்புகார் கப்பல் போக்குவரத்து கழக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

தென் தாமரைகுளம் அருகே வீடு புகுந்து இளம்பெண் மீது தாக்குதல் வாலிபர் மீது வழக்கு

கன்னியாகுமரி, அக்.15

தென் தாமரைகுளம் அருகே தெற்கு கரும்பாட்டூர் பகுதியை சேர்ந்தவர் தேவசந்திர தாஸ் (72). இவரது மகள் எலைட் டெனிஷா (25). பெங்களூருவில் உள்ள ஒரு தனியார் மருத்துவமனையில் நர்சாக பணியாற்றிய போது அவருக்கு அதே பகுதியை சேர்ந்த மஞ்சுநாதன் மனோஜ் (31) என்பவருடன் பழக்கம் ஏற்பட்டது. அப்போது இரண்டு பேரும் செல்போனில் ஒன்றாக புகைப்படம் எடுத்துக் கொண்டதாக தெரிகிறது. இதற்கிடையில் இரண்டு பேருக்கும் இடையே திடீரென கருத்து வேறுபாடுஏற்பட்டுள்ளது.இதனால்இருவரும்பிரிந்துவிட்டனர்.

அதன் பிறகு எலைட் டெனிஷா சொந்த ஊருக்கு வந்து விட்டார் சம்பவ தினம் மனோஜ் தெற்கு கரும்பாட்டூரில் உள்ள தேவ சந்திரதாஸ் வீட்டிற்கு சென்றுள்ளார். பின்னர் அங்கு எலைட் டெனிஷாவிடம் தகாத வார்த்தைகளால் திட்டி தகராறு செய்துள்ளார். ஒரு கட்டத்தில் ஆத்திரமடைந்த மனோஜ் இளம் பெண்ணை கைகளால் தாக்கி கொலை மிரட்டல் விடுத்ததாக தெரிகிறது. பின்னர் ஒன்றாக பழகிய போது எடுத்த புகைப்படங்களை இன்ஸ்டாகிராமில் வெளியிடுவேன் என்று மிரட்டி விட்டு சென்றுள்ளார். இது குறித்து தேவசந்திரதாஸ் தென்தாமரை குளம் காவல் நிலையத்தில் புகார் அளித்தார். போலீசார்வீடு புகுந்து இளம்பண்ணைதாக்கிகொலை மிரட்டல் விடுத்த மனோஜ் மீது வழக்கு பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

குமரியில் நடப்பு நிதியாண்டில் ரூ.100 கோடி அளவிலான கல்விக்கடன் வழங்கப்படும் ;கலெக்டர் தகவல்



நாகர்கோவில், அக்.15

கன்னியாகுமரி மாவட்ட நிர்வாகம் மற்றும் மாவட்ட முன்னோடி வங்கி இணைந்து வங்கியாளர் மற்றும் மாவட்டத்தில் உள்ள அனைத்து கல்லூரிகளின் முதல்வர் மற்றும் பிரதிநிதிகளுக்கான சிறப்பு கல்விக்கடன் விழிப்புணர்வு மற்றும் பயிற்சி முகாம் மாவட்ட ஆட்சியர் அலுவலக வருவாய் கூட்டரங்கில் நடைபெற்றது. இம்முகாமில் மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் கலந்துகொண்டு கூறியதாவது: தமிழ்நாடு அரசு நடப்புநிதியாண்டில்(2025 2026) கன்னியாகுமரி மாவட்டத்திற்குட்பட்ட 4 ஆயிரம் மாணவமாணவிகளுக்கு ரூ.100 கோடி அளவிலான கல்விக்கடன் வழங்க இலக்கு நிர்ணையிக்கப்பட்டுள்ளது. கடந்த ஆண்டைவிட அதிகமான மாணவ மாணவிகளுக்கு கல்விக்கடன் வழங்கிட ஒருங்கிணைந்து செயல்படவேண்டும். இதற்ககாக எந்தெந்த கல்லூரிகளில் எந்தெந்த நாட்களில் கல்விக்கடன் முகாம்கள் நடத்தப்படவேண்டும் என்பன உள்ளிட்ட விவரங்களுடன் விரிவான வழிகாட்டுதல் வழங்கப்படும். கல்விக்கடன் பெறுவதற்கான நடைமுறைகள் எளிமைபடுத்தப்பட்டுள்ளன. மாணவர்கள் வங்கிகளுக்கு நேரடியாக செல்லவேண்டிய அவசியம் இன்றி பி.எம்.வித்யாலட்சுமி என்ற வலைத்தளம் வாயிலாக விண்ணப்பிக்க முடியும்.

இணையவழியில் விண்ணப்பிக்கும் முறை குறித்து கல்லூரி பிரதிநிதிகளுக்கு விரிவாக செயல்முறை விளக்கத்துடன் எடுத்துரைக்கப்பட்டது.

நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் மூன்று கட்டமாக ஒன்பது வட்டார அலுவலகத்திற்குட்பட கல்லூரி மாணவ மாணவிகளுக்கு மாபெரும் கல்விக்கடன் முகாம் நடத்த முடிவு செய்யப்பட்டது. முதற்கட்டமாக கல்விக்கடன் மேளா 27.10.2026 அன்று காலை 10.00 மணியளவில் சுங்கான்கடை புனித சேவியர் கத்தோலிக் பொறியியல் கல்லூரியில் வைத்து நடைபெற உள்ளது. மேற்படி முகாமிற்கு அனைத்து கல்லூரி முதல்வர்களும் கல்விக்கடன் தேவைப்படும் மாணவ மாணவியர்களை அழைத்து வருமாறு அறிவுறுத்தப்பட்டது. இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்தார். நடைபெற்ற கூட்டத்தில் மாவட்ட முன்னோடி வங்கி மேலாளர் செல்வராஜ், அனைத்து கல்லூரி முதல்வர்கள் மாவட்டத்திற்குட்பட்ட அனைத்து வங்கி ஒருங்கிணைப்பாளர்கள், கல்லூரி பிரதிநிதிகள், துறை அலுவலர்கள் உட்பட பலர் கலந்துகொண்டார்கள்.

புதுக்கடையில் சேவாபாரதி அகாடமி திறப்பு விழா

புதுக்கடை, அக்.15

சேவாபாரதி சார்பில் கிராமப்புற மாணவியருக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சியாக தையல், கணினி, ஆரி ஒர்க், பொம்மை தயாரித்தல் ஆகியன வழங்கி வருகிறது. இதன் அடுத்த கட்டமாக கிராமப்புற மாணவியர் அரசு வேலை வாய்ப்பினை பெறுவதற்கான பயிற்சி வகுப்புகளை நடத்துவதற்கு புதுக்கடையில் சேவாபாரதி அகாடமி தொடங்கப்பட்டுள்ளது.



அதன் அலுவலக திறப்பு விழா நடைபெற்றது. சேவாபாரதி கன்னியாகுமரி மேற்கு மாவட்ட துணைத் தலைவர் மற்றும் அகாடமி தலைவர் வசந்தன் தலைமை வகித்தார். மாநில செயற்குழு உறுப்பினர் கிருஷ்ணன் குட்டி, குமரி விபாக் துணைத் தலைவர் பியூலா ஜாஸ்மின் ஆகியோர் முன்னிலை வகித்தனர். இணைப் பொதுச் செயலாளர் சஜீவ் அனைவரையும் வரவேற்றார். மாவட்டதுணைத்தலைவர் காமராஜ், பொருளாளர் இராஜேந்திரன் ஆகியோர் வாழ்த்துரை வழங்கினர். புள்ளியியல் துறையின் பணி நிறைவு துணை இயக்குநர் மற்றும் தாளாளர் தர்மராஜ், முஞ்சிறை ஒன்றிய தலைவர் கிருஷ்ணகுமார் ஆகியோர் கருத்துரை வழங்கினர். சிறப்பு விருந்தினராக மாநில பெற்றோர் ஆசிரியர் கழக துணைத் தலைவர் சிந்து குமார் கலந்து கொண்டு அலுவலகத்தைத் திறந்து வைத்தார்.

நிகழ்ச்சிக்கான ஏற்பாட்டினை வணிக வரித்துறையின் பணி நிறை உதவி ஆணையர் பாஸ்கரன், கியூ பிரிவு பணி நிறை உதவி ஆய்வாளர் மோகன் தாஸ், பைங்குளம் ஆசிரியர் காமராசன், கூட்டுறவுத் துறை பணி நிறை பதிவாளர் இரவீந்திர குமார், செறுகரை இராமகிருஷ்ணன் ஆகியோர் செய்திருந்தனர். ஒருங்கிணைப்பாளர் ரெவிந்திரன் அனைவருக்கும் நன்றி கூறினார்.

6 அம்ச கோரிக்கைகளை வலியுறுத்தி தமிழ் நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் ஆர்ப்பாட்டம்



ஈரோடு அக் 15 தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கம் சார்பில் ஈரோடு தாலுகா அலுவலகம் முன்பு ஆர்ப்பாட்டம் நடந்தது.வட்ட கழக தலைவர் அண்ணா துரை தலைமையில்நடந்த இந்த ஆர்ப்பாட்டத்தில் மாவட்ட செயலாளர் விஜய் மனோகரன் ஆர்ப் பாட்டத்தை தொடங்கி வைத்து பேசினார் இதில் மாவட்ட பொருளாளர் சுமதி, வட்டக் கழக செய லாளர் சந்திரமௌலி, வட் டக் கழக பொருளாளர் பாலமுருகன் உட்பட நிர் வாகிகள் பலர் கலந்து கொண்டு கோரிக்கை களை வலியுறுத்தி கோஷங்கள் எழுப்பினர். பழைய பென்ஷன் திட் டத்தை அமல்படுத்த வேண்டும்.கடந்த ஆண்டு டிசம்பர் மாதம் 31ம் தேதிக்கு முன்னாள் ஓய்வு பெற்றவர்களுக்கும் பென் ஷன் பணிகளை நீட்டிக்க வேண்டும் சத்துணவு ஊழியர்களை கொண்டே காலை உணவு திட்டத்தை செயல்படுத்த வேண்டும். அவர்களுக்கு காலமுறை ஊதியம் வழங்க வேண் டும். சாலை பணியாளர்க ளின் 41 மாத பணி நீக்க காலத்தை நீதிமன்ற தீர்ப் பின் அடிப்படையில் பணிக்கலமாக அறிவிக்க வேண்டும். மருத்துவத் துறையில் மருத்துவர்கள் செவிலியர்கள் உட்பட அனைத்து நியமனங்க ளையும் ஒப்பந்த அடிப்ப டையில் நியமிக்கும் தமி ழக அரசின் முடிவை கைவிட்டு காலமுறை ஊதிய அடிப்படையில் நியமனங்களை மேற் கொள்ள வேண்டும். 6 லட்சத்துக்கும் மேற்பட்ட காலி பணியிடங்களை நிரப்ப வேண்டும். தமிழக இளைஞர்களுக்கு அரசு துறைகளில் ஒப்பந்த அடிப்படையிலான நிய மன முறையை கைவிட்டு கால முறை ஊதியத்தில் நியமனங்கள் வழங்க வேண்டும் என்ற கோரிக் கைகளை வலியுறுத்தி இந்த ஆர்ப்பாட்டம் நடந் தது .

இது பற்றி நிர்வாகிகள் கூறும் போது இந்த கோரிக் கைகளை நிறைவேற்றக்கோரி வரு கிற 28ஆம் தேதி மாவட்ட தலைநகரங்களில் தாலுகா அலுவலகம் முன்புதர்ணா போராட்டம், வருகிற நவம்பர் மாதம் 18ஆம் தேதி ஊழியர் சந்திப்பு பிர சார இயக்கம் ,டிசம்பர் 4ஆம் தேதி ஒரு லட்சத்துக் கும் மேற்பட்ட அரசு ஊழி யர்களை திரட்டி தமிழக முதல்வரிடம் பெருந்திரள் முறையீடு போன்ற தொடர் போராட்டங்கள் தொடர் போராட்டங்கள் நடத்தப்படும் என்று கூறி னர்.



சிவகங்கை மாவட்ட தொழில் மையம், காரைக்குடி ரோட்டரி சங்கம் இணைந்து மாபெரும் தொழில் கடன் மேளா!

காரைக்குடி, அக். 14: சிவகங்கை மாவட்ட தொழில் மையம் மற்றும் சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவனங்கள் துறை சார்பில், காரைக் குடி ரோட்டரி சங்கத்து டன் இணைந்து மாபெ ரும் தொழில் கடன் மேளா இன்று (அக். 14) காலை 9 மணிக்கு கண்ட னூர் மணிமண்டபத்தில் ந டை பெ று கி ற து .

இம்மேளாவில் புதிய தொழில்தொடங்கவிரும் பும் இளைஞர்கள், தொழில் முனைவோர் மற்றும்சிறு, குறு, நடுத்தர தொழில் நிறுவன உரிமை யாளர்களுக்கு வங்கிக் கடன் வசதிகள், அரசு மானியங்கள் மற்றும் தொழில் முனைவோர் திட்டங்கள் குறித்து ஆலோசனைகள் வழங் க ப் ப டு கி ன் ற ன . குறிப்பாக,புதியதொழில் முனைவோர் மற்றும் தொழில் நிறுவன மேம் பாட்டுத் திட்டமான NEEDS, வேலைவாய்ப் பற்ற இளைஞர்களுக் கான சுயதொழில் திட்ட மான UYEGP ஆகியவற்றின் தகுதிகள், கடன் வசதிகள் மற்றும் மானிய உதவிகள் குறித்து வி ள க் க ம ளி க் க ப் படுகிறது.

தூய்மையான நாகர்கோவில் மாநகராட்சியை உருவாக்குவது நம் அனைவரின் பொறுப்பு

நாகர்கோவில் மாநகராட்சி ஆணையர் அறிவிப்பு

நாகர்கோவில் மாநக ராட்சி ஆணையாளர் ஐஸ் வர்யா இ ஆ ப., அவர்கள் தெரிவித்துள்ள அறிக்கை யி ல் கூ ற ப் ப ட் டு ள் ள தா வது நாகர்கோவில் மாநக ராட்சி பகுதியில் திறந்த வெளியில் குப்பை கொட் டுவோர் மீது நடவடிக்கை எடுக்கப்படும் . பொதுமக்கள் மற்றும் வணிக நிறுவனங்கள் தங் களது குப்பைகளை பொது இடங்கள், சாலை யோரங்கள் மற்றும் திறந்த வெளிகளில் கொட்டுவது சு ற் று ச் சூ ழ லு க் கு ம் , பொது சுகாதாரத்திற்கும் பெரும் பாதிப்பை ஏற்ப டுத்துவதுடன், தூய்மைப் பணியாளர்களின் பாது காப்பிற்கும் அச்சுறுத்த லாக அமைகிறது. நாகர்கோவில் மாநகராட் சிப் பகுதிகளில் மேற் கொள்ளப்பட்ட கள ஆய் வின் போ து , திறந்தவெளியில் கொட் டப்பட்ட குப்பைகளில் இருந்து ஒரு ரசீது கண்டெ டுக்கப்பட்டுள்ளது. எனி னும், அந்த ரசீதில் உள்ள விவரங்களின் அடிப்ப டையில் சம்பந்தப்பட்ட நபரின் முகவரியைக் கண் டறிய இயலவில்லை.



எனவே, பொதுமக்கள் அனைவரும் இத்தகைய செயல்களில் ஈடுபடுவ தைத் தவிர்க்க வேண்டும் என எச்சரிக்கப்படுகிறார் கள். இனிவரும் காலங்க ளில், திறந்தவெளியில் கொட்டப்படும் குப்பைக ளில் இருந்து கண்டறியப் படும் ரசீதுகள் மற்றும் பிற ஆவணங்களின் அடிப்ப டையில் சம்பந்தப்பட்ட நபர்கள் அல்லது நிறுவ னங்களை அடையாளம் காண நடவடிக்கை எடுக் கப்படும். உரிய விசா ரணை மற்றும் நடைமு றைகளின் அடிப்படை யில் சம்பந்தப்பட்டவர் களுக்கு அறிவிப்பு வழங் கப்பட்டு, நடைமுறை யில் உள்ள விதிகளின்படி அபராதம் விதிக்கப்படும். மேலும் குப்பைகளை பொது இடங்களில் கொட்டுவது தவிர்க்கப்பட வேண்டும். மாநகராட்சி நிர்ணயித்துள்ள முறைக ளின்படி குப்பைகளைத் தரம் பிரித்து, உரிய முறை யில் ஒப்படைத்து, நாகர் கோவில் மாநகரத்தைத் தூய்மையாகவும் சுகாதார மாகவும் வைத்திருக்க அனைவரும் ஒத்துழைக் குமாறு கேட்டுக்கொள் ளப்படுகிறார்கள். தூய்மையான நாகர்கோ வில் நம் அனைவரின் பொறுப்பு என நாகர்கோவில் மாநக ராட்சி ஆணையாளர் தெரி வித்துள்ளார்

தென் மண்டல காவல் அதிகாரிகளுக்கான துப்பாக்கிச் சுடும் போட்டியில் திண்டுக்கல் நகர் டிஎஸ்பி கார்த்திக் பரிசுகள் வென்றார்



திண்டுக்கல், அக்.15 மதுரை மாவட்டம் சார் பில் 12 மற்றும் 13 ஆகிய தேதிகளில் கடலூர் துப் பாக்கிச் சுடும் பயிற்சித் தளத்தில் நடைபெற்றது. இப்போட்டியில் பங் கேற்ற காவல் அதிகாரிக ளின் துப்பாக்கிச் சுடும் திறன், குறிதவறாததுல்லி யம் மற்றும் தொழில் முறை திறன்களை மேம்ப டுத்தும் நோக்கில் பல்வேறு பிரிவுகளில் போட்டிகள் நடத்தப் ப ட் ட ன . மதுரை சரக டிஐஜி அபி னவ்குமார், மதுரை மாவட்ட காவல் கண்கா ணிப்பாளர் தேவநாதன், சிவகங்கை மாவட்ட காவல் கண்காணிப்பாளர் அபிஷேக் குப்தா, காவல் சிறப்புப்படை 6ம் அணி, மதுரை, தளவாய் மதுகு மாரி மற்றும் மதுரை மாந கர ஆயுதப்படை துணை ஆணையாளர் பிரபாகர் ஆகியோர் உட்பட 2 கூடு தல் காவல் கண்காணிப் பாளர்கள் மற்றும் 14 உதவி கண்காணிப்பாளர் கள் / துணைக்காவல் கண் காணிப்பாளர்கள் இப் போ ட் டி யி ல் க ல ந் து கொ ண் ட னர் . போ ட் டி க ளின் முடிவுகளாவன : "9 மி.மீ. பிஸ்டல் / .380 ரிவால்வர் பிரிவில்" முதல் பரிசு அனில் குமார், DSP சிவ காசி உட்கோட்டம், இரண்டாம் பரிசு அபி ஷேக் குப்தா, I.P.S., காவல் கண்காணிப்பா ளர், சிவகங்கை, மூன்றாம் பரிசு கார்த்திக், DSP திண் டுக்கல் உட்கோட்டம், "5.56 மி.மீ. INSAS துப்பாக் கிப் பிரிவில்" முதல் பரிசு விஷ்ணுபிரியா, DSP ஆண் டிபட்டி உட்கோட்டம், இரண்டாம் பரிசு கார்த்திக் DSP திண்டுக்கல் உட் கோட்டம், மூன்றாம் பரிசு அபிஷேக் குப்தா, காவல் கண்காணிப்பாளர், சிவ கங்கை, "ஒட்டுமொத்த சாம்பியன்ஷிப் பிரிவில்" முதல் பரிசு அபிஷேக் குப்தா, காவல் கண்கா ணிப்பாளர், சிவகங்கை, இரண்டாம் பரிசு: அனில் குமார் DSP, சிவகாசி உட் கோட்டம், மூன்றாம் பரிசு: கார்த்திக், DSP, திண் டுக்கல் உட்கோட்டம் பரி சுகளை வென்றனர். இப் போட்டிகளில் வெற்றி பெற்ற காவல் அதிகாரிக ளைப் பாராட்டும் வகை யில், தென் மண்டல ஐஜி விஜயேந்திர பிதாரி, வெற்றி பெற்ற அதிகாரி களுக்குக் கோப்பைகள் மற் று ம் சான்றிதழ்களை வழங்கிப் பாராட்டினார்.

சிவகங்கை மாவட்டம் காரைக்குடி அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் முதுகலை வணிகவியல் மற்றும் ஆராய்ச்சித்துறை துவக்க விழா



அழகப்பா அரசுகலைக் கல்லூரியின் முதுகலை வணிகவியல் மற்றும் ஆராய்ச்சித்துறையின்சார் பாக வணிகவியல் மன்றத் துவக்க விழா இன்று கல் லூரியின் உமையாள் கலையரங்கில் நடைபெற் றது. இதில் கல்லூரியின் முதல்வர் முனைவர் வசந்தி தலைமை உரை யாற்றினார். அழகப்பா பல்கலைக்கழக வணிகவி யல் துறைத் தலைவர் முனைவர் நெடுமாறன் சிறப்பு விருந்தினராகக் கலந்து கொண்டு வணிக வியலின் முக்கியத்துவம் மற்றும் வணிகவியல் பயி லும் மாணவர்களின் சமூ கப் பங்கு பற்றி மாணவர் களுக்கு எடுத்துரைத்தார். அழகப்பா அரசு கலைக் கல்லூரியின் வணிகவி யல் துறைத் தலைவர் முனைவர் லதா தொடக்க உரையாற்றினார். மூன்றா மாண்டு மாணவி ஸ்ரீநிதி வரவேற்புரை ஆற் றினார். மூன்றாமாண்டு மாணவி சரண்யா நன்றி கூறினார். விழா ஏற்பாடு களை வணிகவியல் துறை இணைப் பேராசிரியர் முனைவர் லக்ஷ்மணக்கு மார் செய்திருந்தார். இவ் விழாவில் பேராசிரியர்க ளும், வணிகவியல் துறை மாணவ மாணவியரும் கலந்துகொண்டு சிறப்பித் தனர்.

போதைப் பொருள் தடுப்புவிழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி



திருப்பூர், அக்.15 இசெட்3 ஸ்போர்ட்ஸ் சார்பில், போதைப்பொ ருள்தடுப்புமற்றும்சைபர் குற்றங்கள் குறித்து விழிப் புணர்வை ஏற்படுத்தும் வகையில் தமிழ்நாடு காவல்துறையின் டி20 போதை விழிப்புணர்வு கிரிக்கெட் போட்டி திருப் பூரில் நடைபெற்றது. இ ப் போ ட் டி யி ல் சென்னை சிட்டி, தாம்ப ரம் சிட்டி, தஞ்சாவூர் மற் றும் மேற்கு மண்டலம் ஆகிய 4 காவல்துறை அணிகள் பங்கேற்றன. நிகழ்ச்சியில் திருப்பூர் மாவட்ட கிரிக்கெட் அசோசியேஷன் தலை வர் மற்றும் ஈஸ்ட்மேன் எக்ஸ் போர்ட்ஸ் நிறுவ னத்தின் தலைவர் சந்தி ரன்சிறப்புவிருந்தினராகக் கலந்துகொண்டு போட்டி யைத் தொடங்கிவைத் தார்.

இசெட்3 ஸ்போர்ட்ஸ் நிறுவனரும், ஐடிசிஎஸ் எப்டென்னிஸ்கிரிக்கெட் ஸ்போர்ட்ஸ் அசோசியே ஷன்தமிழ்நாடுதலைவரு மான முகமது ஷபி வர வேற்று பேசினார். சென்னை போலீஸ் இன்ஸ்பெக்டர் மனோஜ் போதைப் பொருளின் தீமைகள் மற்றும் அதிலி ருந்து இளைஞர்கள் தங்க ளைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டியதன் அவசியம் குறித்து பேசி னார். நிகழ்ச்சியில் இளம் விளையாட்டு வீரர்கள், பள்ளி மாணவமாணவி கள், பெற்றோர்கள் உள் பட பலர் கலந்து கொண் டனர். போட்டிகளின் முடிவில் தாம்பரம் சிட்டி போலீஸ் அணி முதலிடத் தைப் பெற்று சாம்பியன் பட்டத்தை கைப்பற்றி யது. வெற்றி பெற்ற வீரர் களுக்கு வீரர்களுக்கு கோப்பைகளும் பதக்கங் களும் வழங்கி கவுரவிக் கப்பட்டன.



தூத்துக்குடி மாவட்டம், வல்லநாடு தலைமை நீரேற்று நிலையத்தின் செயல்பாடுகள் குறித்து நேற்று மாவட்ட ஆட்சியர் விஷ்ணு மகாஜன் அவர்கள் ஆய்வு மேற்கொண்டார்.

விசிக கட்சி மாநில செயலாளர் தலைமையில் 60 குடும்பங்களுக்கு மாற்று இடம் பட்டா உடனே வழங்க வலியுறுத்தி மாவட்ட ஆட்சியரிடம் மனு



கன்னியாகுமரி மாவட் டம் நாகர்கோவில் மாநக ராட்சிக்குட்பட்ட மாடன் கோவில் தெருவில் சுமார் 60 ஆண்டுகளாக வசித்து வரும் 60 குடும்பங்களை அப்புறப்படுத்த முயற்சிக் கும் பொதுப்பணித்துறை யினர் உடனடியாக அப்பு ற ப் ப டு த் த வ லி யு று த் து வ தை கைவிட வேண்டுமென வும் அப்பகுதி மக்களின் வாழ்வாதாரத்தை கருத் தில் கொண்டு அவர்க ளுக்கு மாநகராட்சி பகுதி யிலேயே மாற்று இடம் பட்டா உடன் வழங்கி மறுவாழ்வு அளிக்க முன் வரவேண்டும் என்று கோரிக்கையை முன் வைத்து விடுதலை சிறுத் தைகள் கட்சி மாநிலச் செயலாளர் அல் காலித் தலைமையில் அப்பகுதி மக்களுடன் வந்து மாவட்ட ஆட்சியர் பிரதா பிடம் மனு அளித்தனர் . இல்லையென்றால் மிகப் பெரிய போராட்டத்தில் ஈடுபடுவோம் என தெரி வித்துள்ளனர்.

நீரை சேமிப்போம்!
மரங்களை வளர்ப்போம்!
பூமிக்கு உயிர் கொடுப்போம்!

கொங்கு இயற்கை மருத்துவ கல்லூரியில் யோகாசன போட்டி!

பெருந்துறை, அக். 15 ஈரோடு மாவட்டம் பெருந்துறை கொங்கு இயற்கை மருத்துவம் மற் றும் யோகா மருத்துவக் கல்லூரியில் மாநிலங்க ளுக்கு இடையேயான யோகாசனப் போட்டி நடைபெற்றது. இப் போட்டியில் 450 பள்ளி மாணவர்கள், 200 கல் லூரி மாணவர்கள் என மொத்தம் 650 மாணவர் கள் பங்கேற்றனர். இப்போட்டியை கோமு கேஸ்வரா யோகா மற்றும் இயற்கை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனம், கொங்கு இயற்கை மருத் துவம் மற்றும் யோகா மருத்துவக் கல்லூரி, பெருந்துறை, மற்றும் பாரதி யோகா மற்றும் உடற்பயிற்சி மையம் ஆகிய நிறுவனங்கள் இணைந்து நடத்தின. டாக்டர் பிரதாப் சிங், மற் றும் டாக்டர் ஸ்ரீகுமார், ஆகியோர் தலைமை யில். ஆலோசகர்களாக டாக்டர் வள்ளிமுருகன், மற்றும் டாக்டர் ராஜரத்தி னம், . நிகழ்ச்சி அமைப் பாளராக கவுதம் செல்வ ராஜ், ஒருங்கிணைப்பாள ர்களாக டாக்டர். பிரணவ், மற்றும் இளவரசன், ஆகி யோர் செயல்பட்டனர்.



குடியாத்தத்தில் 105 கர்ப்பிணித் தாய்மார்களுக்குச் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி!



குடியாத்தம், அக். 15 வேலூர் மாவட்டம், குடி யாத்தத்தில் ஒருங்கி ணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்டத்தின்சார் பில் 105 கர்ப்பிணித் தாய் மார்களுக்குச் சமுதாய வளைகாப்பு நிகழ்ச்சி நடைபெற்றது.

இந் நி க ழ் ச் சி க் கு மாவட்ட திட்ட அலுவ லர் ரா. சுமதி தலைமை தாங்கி வாழ்த்துரை வழங் கினார். மாவட்ட ஒருங்கி ணைப்பாளர் சு. அருண்கு மார், குடியாத்தம் வட்டாட்சியர் பிரியா ஆகியோர் வாழ்த்திப் பேசினர்.

சிறப்பு அழைப்பாளரா கக் கலந்து கொண்ட கே.வி.குப்பம் சட்ட மன்ற உறுப்பினர் தென் றல்குமார், சமுதாய வ ள ை க ா ப் பு நிகழ்ச்சியைத் தொடங்கி வைத்தார். மேலும், தமி ழக வெற்றிக் கழகத்தின் வேலூர் கிழக்கு மாவட் டச் செயலாளர் நவின், மத்திய ஒன்றியச் செயலா ளர் அரவிந்தகுமார் ஆகி யோர்நிகழ்ச்சியில்கலந்து கொண்டனர்.

நிகழ்ச்சியில் மருத்துவ அலுவலர் டாக்டர் சதீஷ், யோகா ஆசிரியை தவச் செல்வி, இயற்கை ஆர்வ லர் தினேஷ் சரவணன் மற் றும் அங்கன்வாடி மேற்பார்வையாளர்கள், பணியாளர்கள், உதவியா ளர்கள் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

விழாவில் பங்கேற்ற 105 கர்ப்பிணித் தாய்மார் களுக்கும் சீர்வரிசைப் பொருட்கள் மற்றும் ஐந்து வகையான உணவுகள் வழங்கப்பட்டன.

இறுதியில் ஒருங்கி ணைந்த குழந்தைகள் வளர்ச்சித் திட்ட அலுவ லர் ஷமீம் ரிஹானா நன்றி கூறினார்.

பைக் மீது இருசக்கர வாகனம் மோதி முதியவர் உயிரிழப்பு

தென்தாமரைகுளம்: அக். 15. கன்னியாகுமரி அருகே உள்ள இலந்தையடிவிளை யைச் சேர்ந்த மோகன் (வயது 63). இவருக்கு திரு மணம் ஆகவில்லை. இத னால் அவரது தம்பி கிங்ஸ்லி (வயது 60) உடன் வசித்து வந்துள்ளார் இந்நி லையில் சம்பவத்தன்று இரவு 9.45 மணியளவில் மோகன் தனது இருசக்கர வாகனத்தில் வீட்டிற்கு பொருட்கள் வாங்க மளிகை கடை செல்வதற் காக இலந்தையடிவிளையி லிருந்து மணக்குடி செல் லும் சாலையில் சென்றுள்ளார். அப்போது முகிலன்குடியிருப்பு பகுதி யில் சென்று கொண்டிருந் தபோது, எதிரே கீழமணக்குடியைச் சேர்ந்த ஜான் போஸ்கோ என்பவ ரின் மகன் ஜாய் மெரோ (வயது 18)என்பவர் ஓட்டி வந்த பைக், மோகனின் இருசக்கர வாகனம் மீது மோதி உள்ளது.இந்த விபத் தில் தலையில் பலத்த காய மடைந்த மோகன், சுயநி னைவிழந்த நிலையில் கிடந்துள்ளார். உடனே அவரை ஆம்புலன்சில் ஏற்றி ஆசாரிபள்ளம் அரசு ம ரு த் து வ ம னை க் கு க் கொண்டு செல்லப்பட்டுள் ளார். அங்கு அவரைப் பரி சோதித்த மருத்துவர்கள் அவர் ஏற்கனவே உயிரிழந் துவிட்டதாகத் தெரிவித் துள்ளனர்.

இது குறித்து மோகனின் தம்பி கிங்ஸ்லி தென்தாம ரைகுளம் காவல் நிலையத் தில் புகார் அளித்துள்ளார். இதையடுத்து போலீசார் விபத்தை ஏற்படுத்திய ஜாய் மெரோ மீது வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.விபத் தில் காயமடைந்த ஜாய் மெரோ வும் நாகர்கோவில் அருகே உள்ள ஒரு தனியார் ம ரு த் து வ ம னை யி ல் சிகிச்சைபெற்றுவருகிறார்.



கிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில், சுற்றுலாத் துறை சார்பாக மாவட்ட சுற்றுலா வளர்ச்சிக் குழு கூட்டம் மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தலைமையில் நடைபெற்றது. உடன், மாவட்ட வருவாய் அலுவலர் .மஞ்சுளா, மாவட்ட வன அலுவலர் .என். ஜெயராஜ் மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் .உமா மகேஸ்வரி, உதவி ஆட்சியர் பயிற்சி .சாய் சைதன்யா ஜாதவ். மாவட்ட சுற்றுலா அலுவலர் .கார்த்திக் உள்ளிட்ட பலர் உள்ளனர்.



குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ. மதன் ராஜா மதுரை மாவட்ட ஆட்சித்தலைவர் நிஷாந்த் கிருஷ்ணா, இ.ஆ.ப., தலைமையில் மதுரை மாவட்டம் தமுக்கம் மைதானம் மாநாட்டு மையத்தில் பதிவு பெற்ற அறிவுசார் சொத்துரிமை (IPR), புவிசார் குறியீடு (GI) பெற்ற மற்றும் ஒரு மாவட்டம் ஒரு தயாரிப்பு (ODOP) தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தும் கண்காட்சி மற்றும் கருத்தரங்கினை துவக்கி வைத்து பார்வையிட்டு சிறப்புரை ஆற்றினார்.மதுரை வடக்கு சட்டமன்ற உறுப்பினர் அ.கல்லாணை, மதுரை தெற்கு சட்டமன்ற உறுப்பினர் எம்.எம்.கோபிசன், மாநகராட்சி மேயர் (பொ) / துணை மேயர் தி.நாகராஜன், மாநகராட்சி ஆணையாளர் கௌரவ் குமார்,இ.ஆ.ப., ஆகியோர் உடன் உள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம், நத்தம் சிறப்புநிலை பேரூராட்சிக்குட்பட்ட பகுதியில், மூலதன மானிய நிதி திட்டம் (20252026) ன் கீழ் ரூ.165 இலட்சம் மதிப்பீட்டில் கட்டப்பட்டு வரும் அறிவுசார் மையம் கட்டுமானப்பணிகள்குறித்து மாவட்டஆட்சித்தலைவர்திருமதிதுர்காமூர்த்திநேரில்பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் நத்தம் பேரூராட்சி தலைவர் சேக் சிக்கந்தர் பாட்ஷா, நத்தம் பேரூராட்சி செயல் அலுவலர் விஜயநாத் உட்பட பலர் உள்ளனர்.

மதுரையில் அக். 16 முதல் 18 வரை 'ஆயுஷ் 2026' பாரம்பரிய மருத்துவக் கண்காட்சி



மதுரை

மதுரை மடீட்சியா அரங்கில், அக். 16 முதல் 18ம் தேதி வரை எட்டாவது முறையாக 'ஆயுஷ் 2026' பாரம்பரிய மருத்துவக் கண்காட்சி நடைபெற உள்ளது.

சித்தா, ஆயுர்வேதம், யுனானி, இயற்கை மருத்துவம், ஹோமியோபதி, யோகா உள்ளிட்ட பாரம்பரிய மருத்துவ முறைகள் குறித்த விழிப்புணர்வை ஏற்படுத்தும் வகையில் இக்கண்காட்சி நடத்தப்படுகிறது. மத்திய ஆயுஷ் அமைச்சகம் உள்ளிட்ட பல்வேறு அரசு அமைப்புகளின் ஆதரவுடன் கண்காட்சி ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

இதில், இந்திய மருத்துவ உற்பத்தியாளர்களின் 90க்கும் மேற்பட்ட அரங்குகள் இடம்பெறுகின்றன. மேலும், ஆயுஷ் நல வாழ்வு குறித்த கருத்தரங்குகள், அரிய வகை மூலிகைச் செடிகள் கண்காட்சி மற்றும் இலவசமருத்துவ முகாம் ஆகியவை நடைபெற உள்ளன.

மத்திய சித்த மருத்துவ ஆராய்ச்சிக் குழுமம், தேசிய சித்த மருத்துவ நிறுவனம் உள்ளிட்ட அரசு நிறுவனங்கள் அரங்குகள் அமைத்து, அரசின் உதவிகள், மானியங்கள் மற்றும் சேவைகள் குறித்து விளக்கமளிக்க உள்ளன.

சித்தா, ஆயுர்வேதம், யுனானி மருந்து உற்பத்தியாளர்கள்,மூலப்பொருள் விற்பனையாளர்கள், இயந்திரத் தளவாட மற்றும் பேக்கேஜிங் நிறுவனங்கள் பங்கேற்று தங்களது தயாரிப்புகளைக் காட்சிப்படுத்தஉள்ளனர்.

நத்தம் சிறுகுடியில் மக்கள் தொடர்பு முகாம்

மாவட்ட ஆட்சியர் தலைமையில் நடைபெற்றது



திண்டுக்கல், அக்.15 திண்டுக்கல் மாவட்டம், நத்தம் வட்டத்திற்குட்பட்ட சிறுகுடி ஊராட்சியில் மக்கள் தொடர்பு முகாமானது மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி துர்காமூர்த்தி தலைமையில் நடைபெற்றது. முன்னதாக, முகாமில் அரசின் பல்வேறு துறைகள் ரீதியாக அமைக்கப்பட்டிருந்த செயல்விளக்க கண்காட்சியினை பார்வையிட்டார். வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மைத் துறை சார்பில் மொத்தம் 57 பயனாளிகளுக்கு ரூ.14,12,640/ மதிப்பீட்டில் இலவச வீட்டுமனை பட்டாக்கள் மற்றும் முழுப்புலம், உட்பிரிவு பட்டா மாறுதல், வாரிசு சான்றுகள் ஆகிய வைகளுக்கான ஆணைகளையும், சமூக பாதுகாப்புத் திட்டத்தின் கீழ் பயனாளிகளுக்கு ரூ.1,92,500/ மதிப்பீட்டில் இறப்பு நிவாரண நிதிக்கான காசோலையினையும், வேளாண்மைத் துறை மற்றும் தோட்டக்கலைத்துறையின் சார்பில், 7 பயனாளிகளுக்கு ரூ.1,515/ மதிப்பீட்டில் வேளாண் இடுபொருட்களையும், மருத்துவம் மற்றும் மக்கள் நல்வாழ்வுத்துறையின் சார்பில் 3 கர்ப்பிணித்தாய்மார்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களையும் என ஆகமொத்தம் 76 பயனாளிகளுக்கு ரூ.16,06,655/ மதிப்பீட்டிலான அரசின் நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சித் தலைவர் வழங்கினார். உடன், திண்டுக்கல் வருவாய் கோட்டாட்சியர் பழனிவேல், தனித்துணை ஆட்சியர் (சமூக பாதுகாப்புத் திட்டம்) ஹென்றி பீட்டர், துணை ஆட்சியர் (பயிற்சி) திவ்யலட்சுமி, நத்தம் வட்டாட்சியர் டேனியல் பிரேம்குமார் உட்பட துறை சார்ந்த முதன்மை அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவர் புலவர் ப. சாத்தனார் மனைவி லில்லி படத்திறப்பு மற்றும் நினைவேந்தல் கூட்டம்

சென்னை, அக்15

கவிஞர் க. மாணிக்கவாசகம் முன்னாள் கவுன்சிலரின் மகளும், தலைநகர் தமிழ் சங்கத்தின் முன்னாள் தலைவர் புலவர் ப.சாத்தனார் மனைவியும் ராணிப்பேட்டை பெல் நிறுவனத்தின் செயல் இயக்குனர் மு. அருண் மொழித் தேவன், ஜெய் பீம் அகில இந்திய இந்தியன் ஓவர்சீஸ் வங்கியின் எஸ்.சி, எஸ்டி பணியாளர் கள்நலசங்கத்தின்பொதுச் செயலாளர் மற்றும் முது நிலை மேலாளர் மு. அருள்மணி அரசு, மு. விவேகானந்தன், மாதவி கோகுலன், தென்றல் சிவக்குமார் ஆகியோ



ரின் தாயாருமான லில்லி அம்மாள் நினைவேந்தல் நிகழ்வு சென்னையில் நடைபெற்றது.

லில்லி அம்மாள் உருவப்படத்திற்கு டாக்டர் வீ. ரகுநாதன் மற்றும் பெல் நிறுவனத்தின் செயல் இயக்குனர் மு. அருண்மொழித் தேவன் ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தார்கள். இந்த நிகழ்வில் அகில இந்திய ஜெய்பீம் நலச் சங்கத்தின் நிர்வாகிகள், உறவினர்கள் மற்றும் நண்பர்கள் கலந்து கொண்டு மறைந்த லில்லி அம்மாவுக்கு மரியாதை செய்தார்கள்.

தூத்துக்குடியில் பருவநிலைக்கு ஏற்ற நகர்ப்புற போக்குவரத்து திட்டமிடல் கூட்டம்!



தூத்துக்குடி:தூத்துக்குடி மாநகராட்சியில் பருவநிலைக்கு ஏற்ற நகர்ப்புற போக்குவரத்து திட்டமிடல் குறித்த கலந்துரையாடல் கூட்டம், SRM ஹோட்டலில் நடைபெற்றது.

மாநகராட்சி மற்றும் இங்கிலாந்து அரசின் UK PACT நிதியுதவியுடன் செயல்படும் PACTDigi PULSE திட்டத்தின் கீழ், IIT மெட்ராஸ், TERI, ITDP India, Cenex UK ஆகிய அமைப்புகள் இணைந்து இக்கூட்டத்தை நடத்தின.

மாநகராட்சி ஆணையர் எஸ். பிரியங்கா பேசுகையில், நடைபாதை வசதிகள், பேருந்து நிறுத்தங்களைச் சீரமைத்தல், பருவநிலை சார்ந்த பட்ஜெட் திட்டமிடல் ஆகியவற்றுக்கு முன்னுரிமை அளிக்கப்படும் என்றார். மேயர் ஜெகன் பெரியசாமி, போக்குவரத்து நெரிசலைக் குறைத்து, பொதுப் போக்குவரத்தை மேம்படுத்த நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்தார்.

இக்கூட்டத்தில் பல்வேறு துறைகளைச் சேர்ந்த சுமார் 60 பிரதிநிதிகள் பங்கேற்றனர். மேலும், சாலைப் போக்குவரத்து பசுமை இல்ல வாயு உமிழ்வு, பருவநிலைக்கு ஏற்ற போக்குவரத்து உத்திகள் உள்ளிட்ட நான்கு முக்கிய அறிக்கைகள் வெளியிடப்பட்டன. நடைபாதைகள், சரக்குப் போக்குவரத்து மற்றும் பருவநிலை நிதி தொடர்பாகவும் விவாதிக்கப்பட்டது.

ஈரோட்டில் பொதுப்பணித்துறை மற்றும் நீர்வளத்துறை ஒப்பந்தக்காரர்கள் சங்க மண்டலப் பொதுக்கூட்டம்

ஈரோடு, அக்.15:

தமிழ்நாடு பொதுப்பணித்துறை (PWD) மற்றும் நீர்வளத்துறை (WRD) ஒப்பந்தக்காரர்கள் நல சங்கத்தின் கோவை மண்டலத்திற்கு உட்பட்ட 9 மாவட்டங்களை உள்ளடக்கிய முதல் மண்டலப் பொதுக்கூட்டம் நேற்று ஈரோடு நடைபெற்றது. இந்நிகழ்ச்சிக்கு மண்டலத் தலைவர் C. தில்லை ராஜன் தலைமை தாங்கினார்.



ஈரோடு மற்றும் திருப்பூர் மாவட்டத் தலைவர் P. உதயகுமார் அனைவரையும் வரவேற்புப் பேசினார். சங்கத்தின் மாநிலத் தலைவர் T. செல்வம் சிறப்புரையாற்றினார். இக்கூட்டத்தில் சிறப்பு விருந்தினர்களாக மக்கள் சிந்தனை பேரவையின் தலைவர் ஸ்டாலின் குணசேகரன் ஆகியோர் கலந்துகொண்டுசிறப்பித்தனர். தொடர்ந்து நடைபெற்ற நிர்வாகிகள் உரையைத் அடுத்து, ஆலோசனை கூட்டம் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநில, மண்டலமற்றும்மாவட்ட நிர்வாகிகள் பங்கேற்று ஒப்பந்தக்காரர்களின் பல்வேறு கோரிக்கைகள், தொழில்துறை மேம்பாடு மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் குறித்த முக்கியத் தீர்மானங்களை நிறைவேற்றினர். இக்கூட்டத்திற்கான முழு ஏற்பாடுகளையும் ஈரோடு மற்றும்திருப்பூர்மாவட்ட பொதுப்பணித்துறை நீர்வளத்துறை ஒப்பந்தக்காரர்கள்நலச்சங்கம் சிறப்பாகச் செய்திருந்தனர்.

ஹோம்லேனின் 4வது அனுபவ மையம் திறப்பு விழா

கோவை, அக்:15

இந்தியாவின் முன்னணி வீட்டு உட்புற வடிவமைப்பு நிறுவனமான ஹோம்லேன் தனது 4வது புதிய அனுபவ மையத்தைக் கோவை காளப்பட்டி சாலையில் தொடங்கியுள்ளது.1,350 சதுர அடியில் அமைந்துள்ள இந்த ஸ்டுடியோவில்,ஏஐ தொழில்நுட்பம் மற்றும் ஸ்பேஸ்கிராஃப்ட் தளம் மூலம் 3டி வடிவமைப்பு,உடனடி விலை விவரம்,45 நாள் டெலிவரி உத்தரவாதம் மற்றும் 10 ஆண்டு பொருள் உத்தரவாதம் ஆகியவை வழங்கப்படுகின்றன.இப்புதிய மையத்தை ஆர்க்கிடெக்ட் விக்னேஷ்வர் பி.ஏ.மற்றும் ஆர்க்கிடெக்ட் விக்னேஷ் எம்.ஆகியோருடன் இணைந்து ஹோம்லேன் தொடங்கியுள்ளது.



தொடக்க விழாவில் ஹோம்லேனின் மூத்த துணைத் தலைவர் வெங்கடேஷ் ஜி கலந்துகொண்டு ரிப்பன் வெட்டி மையத்தைத் திறந்து வைத்தார். நிகழ்வில் ஹோம்லேனின் இணை நிறுவனர் மற்றும் தலைமை செயல்பாட்டு அதிகாரி தனுஜ் சவுத்ரி மற்றும் ஹோம்லேன் பார்ட்னர் விக்னேஷ்வர் ஆகியோர் பேசுகையில் வளர்ந்து வரும் கோவையில் வாடிக்கையாளர்களுக்குத் தரமான மற்றும் வெளிப்படையான உள்துறை வடிவமைப்புச் சேவைகளை மனநிறைவோடு வழங்குவதே இந்த மையத்தின் நோக்கம் என்று தெரிவித்தார். மேலும்,ஃபோஃபோ முறையில் நடப்பாண்டில் 100 ஸ்டுடியோக்களைத் திறக்க நிறுவனம் திட்டமிட்டுள்ளது என்றார். ஹோம்லேன் பங்குதாரர் விக்னேஷ்வர் பி.ஏ. பேசுகையில், காளப்பட்டிச் சாலையில் வீட்டு உரிமையாளர்களுக்குச் சேவை செய்ய ஹோம்லேன் உடன் இணைவது ஒரு சிறப்பான தருணம். இந்த அனுபவ மையத்தின் மூலம் வாடிக்கையாளர்கள் தங்கள் வீடுகளை முன்கூட்டியே 3டியில் பார்ப்பதுடன், வெளிப்படையான விலை மற்றும் நம்பகமான சேவையைப் பெற முடியும் என்றார்.

ஆசியவியல் நிறுவனத்தின் 45ஆம் ஆண்டு விழா உலகளாவிய தமிழ்த் திருவிழா



சென்னை, அக் 15,

ஆசியவியல் நிறுவனத்தின் 45ஆம் ஆண்டு விழாவும், தரம் மிக்க நல்ல பல நூல்களின் வெளியீட்டு விழாவும் சென்னை ஆசியவியல் நிறுவனவளாகம் தனிநாயகம் அடிகளார் கலையரங்கில் நடைபெற்றது. தமிழக சட்டப்பேரவைத் தலைவர் பேரவைத் தலைவர் ஜே. சி. டி பிரபாகர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் ஆசியவியல் நிறுவனத்தின் நிறுவனர், இயக்குநர் பேராசிரியர் ஜான் சாமுவேல் இந்நிறுவனத்தின் சாதனைகளை விளக்கிப் பேசினார்.200க்கும் மேற்பட்ட தமிழியல் தொடர்பான உலகளாவிய நூல்களை வெளியிட்டதோடு ஜப்பானிய நிதியுதவியோடு தமிழக ஜப்பானிய உறவின் சின்னமாக ஆசியவியல் நிறுவனத்தின் மிகப்பிரமாண்டமான கட்டிடங்கள் கட்டப்பட்டதையும் அவர் நினைவு கூர்ந்தார்." பேரவைத் தலைவர் ஜே.சி.டி பிரபாகர் பேசுகையில், இந்நிறுவனத்தின் தமிழ்ப் பணிகளை மிகச்சிறப்பாக வியந்து பாராட்டினார். தமிழக அரசின் துணையோடு பல தமிழ்ப் பணிகளை மேற்கொள்வதற்குரிய வாய்ப்புக்களை ஏற்படுத்த வேண்டும் என்பதை அவர் வற்புறுத்தினார். அமெரிக்காவில் வாழும் பிரான்சிஸ் முத்து 20 ஆண்டுகள் தொடர்ந்து உழைத்து திருக்குறள் தொடர்பாக எழுதிய " தி ப்ளேஸ் ஆஃப் திருக்குறள் இன் வேர்ல்ட் எதிக்ஸ்" (The place of Thirukkural in World Ethics) என்ற ஆங்கில நூலை வெளியிட்டு ஆசியவியல் நிறுவனத்தின் நிறுவனர் இயக்குனர் பேராசிரியர் முனைவர் ஜான் சாமுவேல் இந்நிறுவனத்தை 45 ஆண்டு காலம் தமிழ் மொழிக்கும் தமிழுக்கும் பெருமை சேர்க்கும் வகையில் உள்ள அவருடைய செயல்பாடு மிகவும் வியக்க வைப்பதாக பாராட்டுக்கள் தெரிவித்தார்மேலும் இவ்விழாவில் உலகத்தமிழ் பொருளாதார மன்றத் தலைவர் வி.ஆர். எஸ். சம்பத், இங்கிலாந்து நாட்டின் லிவர்பூல் பல்கலைக் கழகப் பேராசிரியர் டேனியல் ஜெயராஜ், யாம் அறக்கட்டளைத் தலைவர், பொறியாளர் சதாசிவம், சென்னைத் கிறித்தவக் கல்லூரி பேராசிரியர் சதாசிவம், இதய நல மருத்துவர் டாக்டர் சொக்கலிங்கம், எஸ்.எஸ்.கல்வி நிறுவனங்களின் தலைவர் மதிவாணன், மியன்மார் நாட்டு இந்தியத் தூதர் பேராசிரியர் ரங்கநாதன், இலங்கை இந்திய வர்த்தக சபைத் துணைத்தலைவர் ஜம்புநாதன் இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி முதல் மதுரை தேசிய நெடுஞ்சாலையில் முத்துலாபுரம் அருகே 17வது முறையாக சேதமடைந்த பாலம் நிரந்தர தீர்வு காண வாகன ஓட்டிகள் கோரிக்கை



கிருஷ்ணகிரி மாவட்டம் ஓசூர் வட்டம் பேரண்ட பள்ளி எஸ். டி.ஆர். ஆர் சாலையில் கண்டெய்னர் லாரி இருசக்கர வாகனத்தின் மீது மோதி விபத்து ஏற்பட்டது அந்த வழியாக சென்றகிருஷ்ணகிரி மாவட்ட ஆட்சித் தலைவர் உடனடியாக இருசக்கர வாகனத்தில் வந்து காயமடைந்த இரண்டு பெண்கள் மற்றும் ஒரு குழந்தைக்கு முதலுதவியாக தண்ணீர் வழங்கி அவர்களை ஓசூர் வட்டாட்சியர் வாகனத்தில் அரசு மருத்துவமனைக்கு கொண்டு சென்று சிகிச்சைஅளிக்க அனுப்பி வைத்தார்மேற்கண்ட விபத்து ஏற்பட காரணமான கண்டெய்னர் லாரியின் ஓட்டுனரை தனது பாதுகாவலர் உடன் மற்றொரு வாகனத்தில் அனுப்பி காவல்துறையில் ஒப்படைத்து வழக்கு பதிவு செய்து விசாரணை செய்ய உத்தரவிட்டார்

விளாத்திகுளம் அக். 15.

தூத்துக்குடி முதல் மதுரை தேசிய நெடுஞ்சாலையில், எட்டையபுரம் தாலுகா, முத்துலாபுரம் பகுதியில் வைப்பாற்றின் குறுக்கே, 2009ல் பாலம் அமைக்கப்பட்டது. தூத்துக்குடி துறைமுகம், திருச்செந்தூர் உள்ளிட்ட பகுதிகளுக்கு, கனரக வாகனங்கள் உட்பட தினமும் பல்லாயிரகணக்கான வாகனங்கள், இந்த உயர்மட்ட பாலத்தின் வழியாக இயக்கப்பட்டு வருகிறது. பாலத்தின் ஒரு பகுதியில், அடிக்கடி விபத்து ஏற்படுவதால், போக்குவரத்து பாதிக்கப்படுவதோடு, வாகன ஓட்டிகளும் அவதியடைந்து வருகின்றனர். வைப்பாற்றின் குறுக்கே முத்துலாபுரம் பகுதியில்



கட்டப்பட்ட உயர்மட்ட பாலம் பயன்பாட்டுக்கு வந்தது முதல் இதுவரை, பல முறை விபத்து ஏற்பட்டுள்ளது. பாலத்தில், 15 மீட்டருக்கு, ஒரு இரும்பு ராடு, கான்கிரீட் இணைப்பில் பொருத்தப் பட்டுள்ளது. இரும்பு அடிக்கடி உடைந்து, கான்கிரீட் பெயர்ந்து, பள்ளம் ஏற்பட்டு, பலர் உயிரிழந்துள்ளனர். கனரக வாகனங்கள் வரும்போது, பாலம் அதிர்வு ஏற்படுகிறது. பாலத்தின் உறுதித் தன்மை கேள்விக்குறியாகி உள்ளது. இதுவரை, 17 முறை விரிசல் ஏற்பட்டு சேதமடைந்துள்ளது. பாலத்தை முழுமையாக அப்புறப்படுத்தி பயணியர் பாதுகாப்பை உறுதி செய்யும் வகையில், புதிய பாலம் கட்ட வேண்டும். இதேபோல, மு.கோட்டூர் விலக்கில், புதிய உயர்மட்ட பாலம் ஒன்றையும், விரைவில் கட்டநடவடிக்கைஎடுக்க வேண்டும் என்பது அப்பகுதி மக்களின் கோரிக்கையாக உள்ளது.

மாவட்டத்தில் முதல் எண்டோஸ்கோபிக் தண்டுவட அறுவை சிகிச்சை



சிவகங்கை அக்.14, ,சிவகங்கை மாவட்டத்தின் முதல் எண்டோஸ்கோபிக் தண்டுவட அறுவை சிகிச்சையை வெற்றிகரமாக மேற்கொண்டு காரைக்குடி அப்போலோ மருத்துவமனை சாதனை படைத்துள்ளது. இதற்கு குறித்து மருத்துவமனை எண்டோஸ்கோபிக் டிஸ்கெக்டமி (Endoscopic Discectomy) என்றால் என்ன?தண்டுவட நரம்புகளை அழுத்தும் பிதுங்கிய வட்டுக்களுக்கு (Herniated Discs) சிகிச்சையளிக்கும் குறைந்தபட்ச ஊடுருவல் (Minimally Invasive) அறுவை சிகிச்சை முறையாகும். இதில் 45 மி.மீ அளவுள்ள இரு சிறிய துளைகள் மூலம் கேமரா மற்றும் மருத்துவக் கருவிகளைச்செலுத்தி,நரம்பை அழுத்தும் வட்டின் பகுதி மட்டும் துல்லியமாக அகற்றப்படுகிறது

முக்கிய நன்மைகள்: பாரம்பரிய அறுவை சிகிச்சையில் 2530 மி.மீ கீறல் தேவைப்படும் இடத்தில், இதில் 46 மி.மீ அளவிலான சிறிய துளைகளே பயன்படுத்தப்படுகின்றன. தசை சேதம், இரத்த இழப்பு மற்றும் அறுவை சிகிச்சைக்குப் பிந்தைய வலி மிகவும் குறைவு.

நோயாளிகள் அதே நாளில் அல்லது அடுத்த நாளே வீடு திரும்பலாம். 57 நாட்களுக்குள் தங்களின் அன்றாடப் பணிகளைத் தொடங்க முடியும்.

எப்போது தேவைப்படுகிறது?

மருந்துகள் மற்றும் பிசியோதெரபி சிகிச்சைகளுக்குப் பிறகும் 6 வாரங்களுக்கு மேல் அறிகுறிகள் நீடித்தாலும், வட்டுப் பிதுக்கத்தால் கழுத்து, முதுகு வலி, சியாட்டிகா (Sciatica) எனக் கால்களில் பரவும் கூர்மையான வலி, உணர்ச்சியின்மை மற்றும் தசை பலவீனம் ஏற்பட்டாலும், எம்.ஆர்.ஐ அல்லது சி.டி ஸ்கேனில் நரம்பு அழுத்தம் உறுதி செய்யப்படும்போது இந்த சிகிச்சை பரிந்துரைக்கப்படுகிறது. பாதிக்கப்பட்ட நரம்பின் மீதான அழுத்தத்தைக் குறைத்து, வலியிலிருந்து நிவாரணம் அளித்து, நோயாளிகளை விரைவாக இயல்பு நிலைக்குக் கொண்டு வருவதே இதன் முக்கிய நோக்கமாகும்.

மருத்துவக் குழுவினர்: இந்த வெற்றிகரமான அறுவை சிகிச்சையை காரைக்குடி அப்போலோ மருத்துவமனையின் மூளை மற்றும் தண்டுவட அறுவை சிகிச்சை மூத்த ஆலோசகர் டாக்டர் சதீஷ் கண்ணன் மற்றும் நிபுணர் டாக்டர் வெக்வின் தலைமையிலான குழுவினர் மேற்கொண்டனர். அப்போலோ மருத்துவமனையின் தலைமை செயல் அதிகாரி டாக்டர் நிழல் திவாரி சிறப்புரை வழங்கினார். யூனிட் ஹெட் திரு. ஜி. கௌதம் மருத்துவத் தலைவர் டாக்டர் அல்தாப் கான் உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஸ்ரீ முப்பிடாரி அம்மன் திருக்கோவிலில் புரட்டாசி பொங்கல் விழா



இலட்சிய ஜனநாயக கட்சியின் மாநில இளைஞரணி துணைச் செயலாளர் அய்யனார் மாஸ் மற்றும் மாநில வர்த்தக அணி துணைச் செயலாளர் ஆப் பநாடு ஆனந்த் அவர்களும் முனியாண்டி அவர்களின் அழைப்பை ஏற்று விழாவில் கலந்து கொண்டு சுவாமி தரிசனம் செய்தனர் சின்ன உடப் பங்குளம் கிராம பொது மக்கள் சார்பாக அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது

இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், சின்ன உடப்பங்குளம் கிராமத்தில் அமைந்துள்ள ஸ்ரீ முப்பிடாரி அம்மன் திருக்கோவிலில் புரட்டாசி மாதம் 19ம் தேதியான 06.10.2026 அன்று செவ்வாய்க்கிழமை புரட்டாசி பொங்கல் விழா சிறப்பாக தொடங்கியது 16.10.2006 சனிக்கிழமை வரை விழா தொடர்ச்சியாக நடைபெறுகிறது

ஈரோட்டில் லலிதா ஜுவல்லரியின் 67வது கிளை திறப்பு: தங்கம், வைர நகைகளுக்கு சிறப்புச் சலுகைகள்!



ஈரோடு: ஈரோடு காவேரி சாலையில் லலிதாஜுவல்லரியின் 67வது பிரம்மாண்ட கிளையை நிறுவனத் தலைவர் கிரண் குமார் திறந்து வைத்தார். நவீன வசதிகளுடன் அமைக்கப்பட்டுள்ள இந்தப் புதிய விற்பனையகம், ஈரோட்டில் நிறுவனத்தின் இரண்டாவது கிளையாகும்.

திறப்பு விழா வை யொட்டி, வாடிக்கையாளர்களைக் கவரும் வகையில் பல்வேறு சிறப்புச்சலுகைகள் அறிவிக்கப்பட்டுள்ளன. குறிப்பிட்ட காலத்திற்கு தங்க நகைகளுக்கு கிராமுக்கு 2 சதவீதம் தள்ளுபடியும், வைர நகைகளுக்கு ரூ.12,000 வரை சலுகையும் வழங்கப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. மேலும், 99 சதவீத வெள்ளி நகைகளுக்கு செய்கூலி மற்றும் சேதாரம் இல்லை என்றும் நிறுவனம் அறிவித்துள்ளது.

வாடிக்கையாளர்கள் நகைகளைப்புகைப்படம் எடுக்கவும், விலை மதிப்பீட்டுச்சீட்டைப் பெற்றுச் சென்று ஒப்பிட்டுப் பார்க்கவும் அனுமதி வழங்கப்படுவதாக கிரண் குமார் தெரிவித்தார்.

தங்கத்தின் விலை சர்வதேசச் சந்தை நிலவரங்களைப் பொறுத்து மாறும் என்றும் அவர் கூறினார். திறப்பு விழாவில் வாடிக்கையாளர்கள் மற்றும் நிறுவன நிர்வாகிகள் பங்கேற்றனர்.

தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் முதலமைச்சர் கோப்பை போட்டிக்கு 40 வீரர் வீராங்கனைகளை முதல்வர் கண்ணன் வாழ்த்தி வழி அனுப்பி வைத்தார்



தருமபுரி அக்டோபர் 15 தமிழ்நாடு மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பை 2026 பல்வேறு விளையாட்டுப் போட்டிகளில் பங்கேற்கும் தருமபுரி அரசு கலைக் கல்லூரி 40 வீரர், வீராங்கனைகளை கல்லூரி முதல்வர் முனைவர் கோ. கண்ணன் வாழ்த்தி வழி அனுப்பினார். தமிழ்நாடு முதலமைச்சர் கோப்பை மாநில அளவிலான விளையாட்டு போட்டிகள் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தின் மூலம் சென்னை, கோவை, திண்டுக்கல் ,நாமக்கல், செங்கல்பட்டு, நாமக்கல், திருச்சி ஆகிய மாவட்டங்களில் 14102026 அன்று தொடங்கி இம்மாதம் இறுதி வரை நடைபெற உள்ளது. அதில் தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் இருந்து கைப்பந்து, கூடைப்பந்து ,பூப்பந்து, கால்பந்து ,இறகுப்பந்து , கேரம், சிலம்பம், நீச்சல் உள்ளிட்ட போட்டிகளில் பங்கேற்பதற்காக 40 வீரர் , வீராங்கனைகள் தருமபுரி மாவட்ட விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் தேர்வு செய்யப்பட்டு மாநிலப் போட்டிகளில் பங்கேற்க உள்ளனர்.

பல்வேறு மாவட்டங்களில் நடைபெறும் மாநிலப் போட்டிகளில் பங்கேற்கும் வீரர் வீராங்கனைகளுக்கு தருமபுரி அரசு கலைக் கல்லூரியில் வழியனுப்பு விழா நடைபெற்றது. கல்லூரி முதல்வர் முனைவர் கோ கண்ணன் அனைத்து விளையாட்டு வீரர்களுக்கும் வாழ்த்துக்களை தெரிவித்து வழி அனுப்பி வைத்தார். அவருடன் உடற்கல்வித்துறை இயக்குனர் முனைவர் கு. பாலமுருகன் , பேராசிரியர்கள் முனைவர் கோ. பிரபாகரன், முனைவர் இரா. கிருபாகரன், முனைவர் அ.தேன் மொழி. முனைவர் அரங்கநாயகி மற்றும் பேராசிரியர்கள், அனைத்து துறைத் தலைவர்கள், கௌரவ விரிவுரையாளர்கள், அலுவலகப் பணியாளர்கள், விளையாட்டு ஆர்வலர்கள் ஆகியோரும் தங்களது வாழ்த்துக்களை தெரிவித்து வழி அனுப்பி வைத்தனர்.

திருவட்டாறு ஆதிகேசவ பெருமாள் கோவிலில் கல் மண்டபம் புனரமைப்பு

செல்ல சுவாமி எம்எல்ஏ ஆய்வு



மார்த்தாண்டம், அக்.15 திருவட்டாறில் மிகவும் பழமை வாய்ந்த பிரசித்தி பெற்ற ஆதிகேசவ பெருமாள் கோவில் உள்ளது. இந்த கோவிலை பத்மநாபபுரம் சட்டமன்ற உறுப்பினர் ஆர்.செல்லசுவாமி, இந்து அறநிலையத துறை மாவட்ட இணை ஆணையர் ஜான்சி ராணி ஆகியோர் இணைந்து ஆய்வு மேற்கொண்டனர். கோவிலின் கிழக்கு பகுதியில் அமைந்துள்ள பழமையான கல் மண்டபத்தை புனரமைக்க, சட்டமன்ற உறுப்பினர் ஆர்.செல்லசுவாமியின் தொடர் முயற்சியின் பயனாக தமிழக அரசு ரூ.50 லட்சம் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது. இதனைத் தொடர்ந்து கோவில் வளாகத்தை ஆய்வுசெய்த எம்.எல்.ஏ., விரைவில் பணிகளை துவங்குமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு அறிவுறுத்தினார்.

மேலும், கோவிலின் மேற்கு பகுதியில் உள்ள காலியிடத்தில் பக்தர்களின் வாகனங்கள் நிறுத்துவதற்கு பார்க்கிங் வசதி ஏற்படுத்தவும், வாசக சாலை மண்டபம் மற்றும் சிதிலமடைந்து காணப்படும் நெற்களஞ்சியத்தை (நெல்புரை) பழமை மாறாமல் சீரமைக்கவும் நடவடிக்கை எடுக்க வேண்டும் என அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார். வாகன நிறுத்துமிடத்திற்கான மதிப்பீடு உடனடியாக தயாரிக்கப்படும் என இணை ஆணையர் ஜான்சி ராணி தெரிவித்தார். ஆய்வின் போது கோவில் நிர்வாகிகள் பொதுமக்கள் உடனிருந்தனர்.

சேலம் மாவட்டம் பெரிய கல்வராயன் மலை கிராமத்தில் நடைபெற்ற மக்கள் தொடர்பு திட்டம் முகாம்



சேலம்: பெத்தநாயக்கன்பாளையம் வட்டம், பெரிய கல்வராயன் மலை, கீழ்நாடு சூளாங்குறிச்சி கிராமத்தில் மக்கள் தொடர்புத் திட்ட முகாம் நடைபெற்றது. இதில் பொதுமக்களிடமிருந்து கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டு, பல்வேறு துறைகள் மூலம் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன.

மலைப்பகுதி மக்களின் நீண்டகாலக் கோரிக்கையை ஏற்று, சமவெளிப் பகுதிகளைப் போல கணினி பட்டா வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. குடிநீர் பிரச்சினைகளுக்குத் தீர்வு காணவும், தொலைதூர நியாயவிலைக் கடைகளுக்குச் செல்வதில் உள்ள சிரமங்களைக் குறைக்கவும் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது.

மேலும், மலைப்பகுதியில் விளையும் காய்கறிகளைச் சந்தைகளில் நல்ல விலைக்கு விற்பனை செய்ய வாகன வசதி ஏற்படுத்துவது குறித்தும் ஆலோசிக்கப்பட்டது. சிறுதானிய சாகுபடி மற்றும்கால்நடைவளர்ப்பை ஊக்குவிக்கவும் திட்டமிடப்பட்டுள்ளது.

இம்முகாமில் வருவாய்த் துறை, வேளாண்மை, தோட்டக்கலை, சுகாதாரம், மகளிர் திட்டம் உள்ளிட்ட பல்வேறு துறைகள் சார்பில் நலத்திட்ட உதவிகள் வழங்கப்பட்டன. மொத்தம் ரூ.1,21,41,930 மதிப்பிலான உதவிகள் வழங்கப்பட்டதாக மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் தெரிவித்தார்.

மதுரையில் 2027-28ம் கல்வியாண்டு முதல் சீர்மிகு அரசு சட்டக்கல்லூரி தென் மாவட்ட மாணவர்கள் பயன்பெற வாய்ப்பு

மதுரை:சென்னை அம்பேத்கர் சட்டப் பல்கலைக்கழகத்தின் சீர்மிகு சட்டப்பள்ளிக்கு இணையாக, தென் மாவட்ட மாணவர்கள் பயன்பெறும் வகையில் மதுரையில் புதிய சீர்மிகு அரசு சட்டக்கல்லூரி அமைக்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இக்கல்லூரி 20272828ம் கல்வியாண்டு முதல் செயல்பட உள்ளது என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மதுரை அரசு சட்டக்கல்லூரி முதல்வர் முனைவர் ப. குமரன் கூறுகையில், தென் மாவட்ட மாணவர்கள் சென்னைக்குச் சென்று சட்டக்கல்வி பயில்வதைத் தவிர்க்கவும், அவர்களின் நிதிச்சுமையைக்குறைத்து தரமான சட்டக்கல்வி பெறவும் இக்கல்லூரி உதவும் என்றார். இத்தகைய வாய்ப்பை ஏற்படுத்திய தமிழ்நாடு முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தார்.

சட்டக்கல்லூரி உதவிப் பேராசிரியர் கார்த்திக் கூறுகையில், வளர்ந்து வரும் சட்டத்துறையின் தேவைகளுக்கு ஏற்ப உயர்தர சட்டக்கல்வியை தென் மாவட்டங்களிலேயே வழங்குவது அவசியம் என்றார். மதுரையில் இக்கல்லூரி அமைவதற்கு தமிழ்நாடு அரசுக்கு நன்றி தெரிவித்தார்.

மேலும், மதுரை அரசு சட்டக்கல்லூரி மாணவர்கள் இத்திட்டத்தை வரவேற்றதுடன், தென் மாவட்ட மாணவர்களுக்கு இது பெரிதும் பயனளிக்கும் என்றும், அறிவிப்பை வெளியிட்ட முதலமைச்சருக்கு நன்றி தெரிவித்தும் உள்ளனர்.

வெளியீடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலர், மதுரை.



கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், வெங்கடாபுரம் ஊராட்சி, ஆஷாத் நகரில், தமிழ்நாடு மின் பகிர்மான கழகம் கிருஷ்ணகிரி மின் பகிர்மான வட்டம் சார்பாக, PM SURYA கார் : முப்பட் பிஜிலி யோஜன, பிரதம மந்திரியின் சூரிய வீடு இலவச மின்சார திட்டத்தின் கீழ், பயனாளி .சுப்பிரமணியம், த/பெ.சின்னதம்பி அவர்களின் வீட்டில், 3.6 கிலோவாட் திறன் கொண்ட 2 சூரிய தகடுகள் ரூ.4 இலட்சத்து 40 ஆயிரம் திட்ட மதிப்பீட்டில், மொத்தம் மானியம் ரூ.2,00,000/ மதிப்பில் சூரிய தகடுகள் பொறுத்தப்பட்டு, வீட்டின் பயன்பாட்டிற்கு மின்சாரம் பயன்படுத்தப்பட்டு வருவதை மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். உடன் செயற்பொறியாளர்கள் .வ.ஜெகநாதன் (பொது/மத்திய அலுவலகம்), .பவுன்ராஜ், உதவி செயற்பொறியாளர்கள் .சிதம்பரம், .நளினி, .பிரேம் குமார் மற்றும் பயனாளிகள் உள்ளனர்.

கிருஷ்ணகிரியில் தமாகா தலைவர் ஜி.கே.வாசன் புதிய பெட்ரோல் பங்கை திறந்து வைத்து செய்தியாளர்களுக்கு பேட்டி



கிருஷ்ணகிரி அக்டோபர் 15: கிருஷ்ணகிரியில் தமிழ் மாநில காங்கிரஸ் கட்சி பிரமுகரின் பெட்ரோல் பங்க் திறப்பு விழாவில் கலந்து கொண்ட தமாகா கட்சி தலைவர் ஜி.கே.வாசன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார்.. அப்போது பேசிய அவர்.. இந்திய தேர்தல் ஆணையத்தின்மீதுவாக்காளர்களுக்கு நம்பிக்கை குறைந்து கொண்டே போகிறது. இந்தியாவில் இனி ஜனநாயக முறைப்படி தேர்தல் சரியாக நடக்க வேண்டுமென்றால் தேர்தல் ஆணையத்தினுடைய சீர்திருத்தங்கள் அவசியம் என்றார்.

தவெக அரசு அதிக விலைக்கு மின் கொள்முதல் செய்தது குறித்த கேள்விக்கு பதில் அளித்த ஜி.கே.வாசன்.. மின் தட்டுப்பாடு இருக்கக்கூடாது, எந்த தரப்பு மக்களுக்கும் எந்த நிலையிலும் மின் வெட்டால் தொந்தரவு இருக்கக்கூடாது. குறிப்பாக மின்வெட்டால் சிறு குறு தொழில் பாதிக்கப்படக்கூடாது. இவைகளை முன்வைத்து தற்காலிகமாக அரசு மக்களுக்கு சேவை செய்யக்கூடும் நிலை ஏற்பட வேண்டும் என்பதற்காக இந்த நிலையை ஏற்படுத்தியிருப்பதாக அந்த துறையின் அமைச்சர் தெளிவாக கூறியுள்ளார். மின்வெட்டு என்பதைவிட மின் தேவை அதிகரித்திருக்கிறது என்பதுதான் உண்மை நிலை. அதற்கு ஏற்றவாறுதான் அரசு மின்சார பிரச்சினையை தற்போது சமாளித்துக் கொண்டிருக்கிறது என்பது தான் நேற்று அமைச்சருடைய தெளிவான அறிக்கை தெளிவுபடுத்தி உள்ளது. அதே போல் கடந்த கால மின் சேவை, இன்றைக்கு தேவைப்படும் மின் சேவை அதனையும் அமைச்சர் அவர்கள் சுட்டிக்காட்டி இருக்கிறார்கள் என்றார்.

தூத்துக்குடியில் மத்திய அரசின் நலத்திட்டங்களை விளக்கும் ரங்கோலி கோலங்கள்!



தூத்துக்குடி: பிரதமர் நரேந்திர மோடியின் பிறந்தநாளை முன்னிட்டு, பாஜக சார்பில் நாடு முழுவதும் ஒரு மாத காலமாக பல்வேறு சேவைப் பணிகள் நடைபெற்று வருகின்றன.

இதன் ஒரு பகுதியாக, தூத்துக்குடி தெற்கு மாவட்ட பாஜக சார்பில், சிவன் கோவில் தேரடி முன்பு மத்திய அரசின் மக்கள் நலத்திட்டங்களை விளக்கும் ரங்கோலி கோலங்கள் வரையும் நிகழ்ச்சி நடைபெற்றது.

இதில், ஜன் தன் யோஜனா, ஸ்வச் பாரத் மிஷன், பிரதம மந்திரி மாத்ருவந்தனாயோஜனா, ஸ்டார்ட் அப் இந்தியா, உஜ்வாலா யோஜனா உள்ளிட்ட 20க்கும் மேற்பட்ட திட்டங்களின் பெயர்கள் மற்றும் நோக்கங்களை விளக்கும் வகையில் வண்ணமயமான கோலங்கள் வரையப்பட்டன. இவற்றைப் பொதுமக்கள் ஆர்வத்துடன் பார்வையிட்டனர். நிகழ்ச்சியில், மாவட்ட பாஜக நிர்வாகிகள் ஏ.எம். ராஜேஷ், விவேகம் ரமேஷ் உள்ளிட்ட கட்சி நிர்வாகிகள், மகளிர் அணியினர் மற்றும் தொண்டர்கள் கலந்து கொண்டனர். மத்திய அரசின் நலத்திட்டங்கள் குறித்த விழிப்புணர்வை மக்களிடம் ஏற்படுத்துவதே இந்நிகழ்ச்சியின் நோக்கமாகும்.

ஓய்வு பெற்ற போக்குவரத்து தொழிலாளர்கள் 2வது நாள் காத்திருப்பு போராட்டம்

கோரிக்கைகளை வலியுறுத்தி நடந்தது



நாகர்கோவில், அக்.15 ஓய்வுபெற்ற போக்குவரத்து தொழிலாளர்களுக்கு அரசாணை 123 படி மருத்துவ காப்பீட்டை அமுல்படுத்த வலியுறுத்தியும், இறந்து போன தொழிலாளர்களின் வாரிசுகளுக்கு தகுதி அடிப்படையில் – காலம் தாழ்த்தாமல் வேலை வழங்கக் கோரியும், 01.04.2003 க்கு பின் பணியில் சேர்ந்தோருக்கு பழைய பென்சன் திட்டத்தை நடைமுறைப்படுத்தக் கோரியும், 2026 ஏப்ரல் முதல் பணி ஓய்வு பெற்றோருக்கு பணபலன்களை வழங்கிடக் கேட்டும், 12(3) ஒப்பந்த அடிப்படையில் சம்பள உயர்வு பண பலன்களை ஓய்வூதியர்களுக்கும் வழங்க கேட்டும், கழகங்களுக்கு வரவுக்கும் செல்வுக்குமான வித்தியாச தொகையை வழங்க வலியுறுத்தியும், மருத்துவ படியை மாதம் 300 ரூபாய் வீதம் வழங்கக் கேட்டும் மாநிலம் தழுவிய காத்திருப்பு போராட்டம் போக்கு வரத்து கழக மண்டல அலுவலகம் முன்பு ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் சம்மேளனம் சார்பில் நடைபெற்றது.

நாகர்கோவில் ராணி தோட்டம் மண்டல தலைமை அலுவலகம் முன் நேற்று நடந்த 2ம் நாள் போராட்டத்திற்கு விரைவு போக்குவரத்து ரேவா மாவட்ட தலைவர் பொன். சோபனராஜ் தலைமை தாங்கினார். டி என் எஸ்டிசி சிஐடியு பொதுச் செயலாளர் சுரேஷ்குமார் துவக்கி வைத்தார்.

ஓய்வு பெற்றோர் நல அமைப்பின் நிர்வாகிகள் லட்சுமணன், சின்னன் பிள்ளை, சுந்தரராஜ், பகவதியப்பன், சங்கரநாராயணன், லியோ, ஜோய், வின்சென்ட், எலியாஸ், ராதாகிருஷ்ணன், செர்கான், ஸ்டீபன் ஜெயக்குமார், பெருமாள், . முதலானோர் பேசினர்.

போராட்டத்தில் பெண்கள் உட்பட திரளானோர் பங்கெடுத்தனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C, 246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.